ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2162/40 - 2020 පෙබරවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.13
*2162/40 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: AKU/LAN/06/ACQVI89.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2018/HA/01.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தில், வலிகம் கோறளை வடக்கு அக்குறஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில், மாணிக்கொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை நில அளவை மா அதிபரின் அ. க. பி. 552, மேலதிக இல. 04 கொண்ட இறுதித் திட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்ற காணியின் எல்லைகள் கீழ்வருமாறு :

**துண்டு இல. 285 – காணியின் பெயர் : கனத்தேகெதரவத்த, பன்ஸலதெனிய; விஸ்தீரணம் : 0.0177 ஹெக்டயார்**

வடக்கு : காணித் துண்டு இல. 14 B; கிழக்கு : காணித் துண்டு இல. 14 B; தெற்கு : காணித் துண்டு இல. 14 B; மேற்கு : காணித் துண்டு இல. 14 B.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அக்குறஸ்ஸ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமை அத்தாட்சிப்படுத்தல் தொடர்பாக அனைத்து காணி உறுதி மற்றும் வேறு ஆவணங்களை பரீட்சித்தலின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஓ. வி. சந்தன திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
அக்குறஸ்ஸ.

பிரதேச செயலகம்,
அக்குறஸ்ஸ,
*2020, பெப்புருவரி 10.*

*2 - 589*

1A - G 32016 - 15 (2020/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.